(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(13).]

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 மே 22, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2026 ஜூன் 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2477/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 மார்ச் 03 ஆம் திகதிய 2478/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106 மற்றும் 78(ஆ) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் ஆக்கப்பட்டு 2026 மார்ச் 12 ஆம் திகதிய 2479/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைதீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான 2025, யூலை மாதத்தில் கையொப்பமிடப்பட்ட பொருத்தனை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூன் 09, செவ்வாய்க்கிழமை)**

1972/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026 ஆம் ஆண்டின் போதுள்ளவாறாக, குறைந்த வருமானம் கொண்ட, நடுத்தர வருமானமுடைய, கிராமிய, பெருந்தோட்ட, மற்றும் சேவைகள் முறையாகக் கிட்டாத நகர்ப்புறம் என்ற ரீதியில் வேறாக்கப்பட்ட, உத்தியோகபூர்வ ரீதியாக மதிப்பிடப்பட்ட, தேசிய வீடமைப்புப் பற்றாக்குறையினை வெவ்வேறாகவும்;

(ii) 2026-2029 காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட அலகு விநியோக இலக்கினையும், வீட்டு வகையின் அடிப்படையில் அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட சராசரி நிர்மாணிப்புச் செலவினையும்;

(iii) தேசிய இடைநிலையளவுக் குடும்ப வருமானத்தின் கீழ் உள்ள பயனாளிகளின் விகிதாசாரத்தினையும்;

(iv) தற்போதுள்ள அடைமான வீதங்கள், பணவீக்கம் மற்றும் நிர்மாணிப்புச் செலவுகளின் அதிகரிப்பு என்பவற்றுடன் ஒப்பிட்டு வீடொன்றை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கும் தன்மை தரநிலைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(v) பயனாளர்களின் தெரிவில் பிரயோகிக்கப்பட்ட புறவயமான தகுதித் தெரிவடிப்படையினையும் டிஜிட்டல் சரிபார்ப்பினையும்;

(vi) ஒழுங்கீனங்களின் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட, மேன்முறையீடு செய்யப்பட்ட, அல்லது இரத்துச் செய்யப்பட்ட 2024-2025 இன் போதான ஒதுக்கீட்டுத் தீர்மானங்களின் எண்ணிக்கையினையும்;

(vii) அரசியல்மயமாக்கம் மற்றும் இரட்டிப்பு என்பவற்றினைத் தடுப்பதற்காக வெளிப்படைத்தன்மையுடைய, பகிரங்கமாக அணுகத்தக்க பயனாளர் பதிவேடு காணப்படுகின்றதா என்பதையும்;

(viii) நடுத்தர வகுப்பு வீடமைப்புத் திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ix) அவ்வாறாயின், அதன் அமைவிடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் பூர்த்தியாக்கல் திகதி என்பவற்றினையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2000/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அல்லது தொடர்புடைய நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் தற்போது குடியிருப்பாளர்களைக் கொண்டுள்ள அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட உயர் மாடி வீட்டுத்தொகுதிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய வீட்டுத்தொகுதிகளில் பொருத்தப்பட்ட, தற்போது செயலிழந்துள்ள மின்னுயர்த்திகளின் மொத்த எண்ணிக்கையினையும், 2025 ஆம் ஆண்டின் போது ஒரு மின்னுயர்த்தி செயலிழந்திருந்த சராசரி நேரத்தையும்;

(iii) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான மொத்தப் பராமரிப்பு ஒதுக்கீட்டையும் மற்றும் ஒவ்வோர் ஆண்டிலும் உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட தொகையையும்;

(iv) பாராமரிப்புக்கான ஒப்பந்தங்கள் ஒரு போட்டிப் பெறுகைச் செயன்முறையூடாக வழங்கப்பட்டதா மற்றும் செயலாற்றுகையின்மை காரணமாக அத்தகைய ஏதேனும் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டதா என்பதையும்;

(v) 2023 ஆம் ஆண்டிலிருந்து சுயாதீனக் கட்டமைப்பு மற்றும் தீயணைப்புப் பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், கண்டயறிப்பட்டவைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(vii) நீண்ட காலப்பகுதிக்கு மின்னுயர்த்திகள் செயலிழந்திருக்கும் போது முதியோர் மற்றும் வலது குறைந்தோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அவசரகால நடவடிக்கைகள் பற்றியும்;

(viii) ஏதேனும் கட்டிடம் பாதுகாப்பற்றதென்றோ, பகுதியளவில் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதென்றோ அல்லது அவசர முதன்மைப் புனரமைப்பு தேவைப்பட்டுள்ளதென்றோ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2003/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 2025 டிசம்பர் 31 வரை நிர்மாணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை கொழும்பு மாநகர சபையெல்லைக்குள்ளும் மற்றும் நாடு தழுவிய ரீதியிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பயனாளர்களில் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்ட மற்றும் பதிவு செய்யக்கூடிய அறுதியுறுதிப்பத்திரங்கள் அல்லது உரிமை மாற்றும் ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தகைய பயனாளிகளின் எண்ணிக்கை கருத்திட்ட வாரியாகவும் ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) உறுதிப்பத்திரங்களை வழங்குவதைத் தடுக்கும் துல்லியமான சட்டக் குறைபாடுகள், நில அளவைக் குறைபாடுகள், காணி சுவீகரிப்பு அல்லது ஆவணக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(v) கடந்த 03 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள கோப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலுவையிலுள்ள உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக, மாதாந்த இலக்குகளை உள்ளடக்கிய காலவரையறையுடன் கூடிய வேலைத்திட்டம் ஏதேனும் உண்டா என்பதையும்;

(vii) குடிமக்களின் சொத்து உரிமைகளைப் பாதிக்கும் நீண்டகாலத் தாமதங்கள் தொடர்பில் எவரேனும் உத்தியோகத்தர் மீது அல்லது ஏதேனும் நிறுவனத்தின் மீது பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2057/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் —

(i) சிங்களம், தமிழ் (தாய் மொழியாக) மற்றும் ஆங்கிலம் (இரண்டாம் மொழியாக) ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(ii) அப்பாடங்களில் சித்தியடையாத பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (ii)இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை, மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையின் சதவீதமாக;

ஒவ்வொரு பாட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் பாடசாலைகளில் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2058/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் —

(i) பதிவாகியுள்ள குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிநிலை ஒவ்வொரு வருடத்துடன் ஒப்பிடுகையில் சதவீதமாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில் கண்டறியப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கையில் பேணிச்செல்லப்பட வேண்டிய உகந்தப் பெறுமானம் யாதென்பதையும்;

(iii) பிறப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, குழந்தைகளை எதிர்பார்க்கும் குடும்பங்களுக்கு ஏதேனும் நிவாரணம் அல்லது சலுகைகள் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2059/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் —

(i) பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(ii) அப்பாடங்களில் சித்தியடையாத பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை, மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் சதவீதமாக;

ஒவ்வொரு பாட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் பாடசாலைகளில் சமயக் கல்வியை மேம்படுத்துவதற்காக எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2084/2026

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் அல்லது ஏதேனும் ஏனைய பிரயோகிக்கத்தக்க சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் ஜா-எல நகர சபை, ஜா-எல தண்டுகம் பெரும பிரதேச சபை, மினுவாங்கொடை நகர சபை, கட்டுநாயக்க-சீதுவ நகர சபை, நீர்கொழும்பு மாநகர சபை, கடான பிரதேச சபை மற்றும் கம்பஹா மாநகர சபை ஆகிய ஆளுகைப் பிரதேசங்களுக்குள் அமுலிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொரு திட்டத்தினதும் பெயர், சட்ட ரீதியான அடிப்படை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி யாவை என்பதையும்;

(iii) அத்தகைய திட்டங்களின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iv) அப்பிரதேசங்களுக்காக வரைவு அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை மற்றும் அத்தகைய திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரசபை யாதென்பதையும்;

(vi) அவற்றின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(vii) வலயமாக்கும் திட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் (அங்கீகரிக்கப்பட்ட, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அல்லது வரைவு வடிவத்திலான) ஏதேனும் அப்பிரதேசங்களுக்குப் பிரயோகிக்கத்தக்கதாக உள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அவற்றின் சட்ட ரீதியான அதிகாரம் மற்றும் அங்கீகார நிலைமை யாதென்பதையும்;

(ix) அவற்றின் பிரதிகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூன் 23, செவ்வாய்க்கிழமை)**

2001/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 முதல் 2026 ஆம் ஆண்டுகளுக்கிடையில் செயற்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமான ‘அதிகமாக உணவுகளை வளர்ப்போம்’ அல்லது அதுபோன்ற கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவை நிர்வகிக்கப்பட்ட அமைச்சுக்கள் அல்லது நிறுவனக் கட்டமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட மொத்த பொதுச் செலவினத்தில், உர மானியங்கள், நீர்ப்பாசன விரிவாக்கம், விதை அபிவிருத்தி , விரிவாக்க சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் சேமிப்பு உட்கட்டமைப்புக்கான ஒதுக்கீடுகள் உட்பட ஆண்டுரீதியான செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகச் சுயாதீனமான செயலாற்றுகைக் கணக்காய்வுகள் அல்லது தாக்க மதிப்பீடுகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இந்தக் காலகட்டத்தில் விவசாயிகளின் இலாபமீட்டும்தன்மை, பயிர் செய்யப்பட்ட பரப்பு, ஒரு ஹெக்டேயருக்கான பயிர் விளைச்சல், உற்பத்திச் செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஆகியவற்றில் காணப்பட்ட போக்குகள் யாவை என்பதையும்;

(vi) உரக் கொள்கை மாற்றங்கள், நீர்ப்பாசனப் பற்றாக்குறைகள், போதுமான களஞ்சிய வசதியின்மை, விநியோகச் சங்கிலித் திறமையின்மைகள், சந்தைச் சிதைவுகள், விலை நிர்ணயத்தில் நிச்சயமற்ற தன்மை, அல்லது கட்டுப்படியான கடனைப் பெறுவதிலுள்ள வரையறுக்கப்பட்ட அணுகல் உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான தடைகள், நிலையான இறக்குமதி மாற்றீட்டையும் உள்நாட்டு விவசாய மீள்திறனையும் தடுத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஜூலை 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

766/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்ட ரீதியாக பொலிஸ் பாதுகாப்புப் பெற உரித்துடைய பதவிகள் மற்றும் அத்தகைய பதவிகளை வகிக்கும் நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(ii) பொலிஸ் பாதுகாப்புப் பெற உரித்தற்ற நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடந்த காலத்தில் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தமையை ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன என்பதை அறிவாரா;

(iii) அவ்வாறாயின், அவ்விடயம் தொடர்பான தகவல்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

774/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் கொரியாவில் E - 8 வீசா வகுதியின் கீழ் தொழில் வாய்ப்புகளை வழங்குதல் தொடர்பாக பிரச்சனைக்குரிய நிலைமையொன்று ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தொழில் வாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) குறித்த தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு பின்பற்றப்படும் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

844/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வதிவிடப் பயிற்சி அளிக்கப்படாது வீட்டு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்கள் சென்றுள்ள நாடுகள் யாவை;

(iii) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்திற்கு அமைவாக வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு வதிவிடப் பயிற்சி அளிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வதிவிடப் பயிற்சி அளிக்கப்படாது வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்கு ஆட்கள் அனுப்பப்பட்டுள்ளதால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு எவ்வளவு;

(v) வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் அனைத்து இலங்கையர்களுக்கும் வதிவிடப் பயிற்சி அளிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

884/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) ‘உருமய’ அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை ‘உருமய’ அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1019/2025

கௌரவ கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையில் தற்போது கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) திணைக்களங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பகிர்வு குறித்து அண்மைக்காலமாக ஏதேனும் மீளாய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதிலிருந்து பெறப்பட்ட முக்கியமான கண்டறிதல்கள் யாவை என்பதையும்;

(iv) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்காக இதுவரையில் முறையாக அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் வெளியிடப்படவில்லையா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தகைய தாமதத்திற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1031/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபைக்காக அங்கீகரிப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்ற சிறுவர்கள் தொடர்பில் அதிகாரசபையிடம் சட்டரீதியான அதிகாரம் காணப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி சட்டரீதியான அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் முறைமை யாது என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1249/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் திணைக்களத்தில், மண் பரிசோதனைக்கான வழிமுறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(iii) மண் பரிசோதனைச் செய்யப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) மண் பரிசோதனைக்காக இற்றைவரை நிறுவப்பட்டுள்ள ஆய்வுக்கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vi) 2024 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பரிசோதனைச் செய்யப்பட்ட மண் மாதிரிகளின் எண்ணிக்கை, அந்த மண் மாதிரிகள் பெறப்பட்ட இடங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1318/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடாக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கையில் 2500 இற்கும் மேற்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் நீண்டகாலமாக அரச நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர் என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 61 ஆயுர்வேத மருத்துவ நியமனங்களில் யுனானி மருத்துவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாமையினால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1375/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள பழக்கப்படுத்தப்பட்ட யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி யானை உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மேற்படி யானைகளை தம்வசம் வைத்திருப்பதற்கான உரிமப்பத்திரம் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் யாவை;

(iv) மேற்படி யானைகள் தொடர்பில் பின்னாய்வு செய்வதற்கும் தொடர்ச்சியாக ஆராய்ந்தறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா;

(v) ஆமெனில், அது தொடர்பில் அமுலில் உள்ள பொறிமுறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1803/2025

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தபால் நிலையங்கள் வகைப்படுத்தலுக்கு அமைவாக வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி மாவட்டத்தில் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் மற்றும் அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி மாவட்டத்தில் தபால் நிலையங்களை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா;

(v) இன்றளவில் குறிப்பிட்ட சில தபால் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதை அறிவாரா;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(vii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(viii) மாவட்டத்தின் தபால் சேவையினை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ix) அதற்காக எடுக்கும் காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அகுரஸ்ஸ தபால் நிலைய அதிபரின் நிருவாக ரீதியான குறைபாடுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா;

(ii) ஊழியர்கள் அவருக்கெதிராக எதிர்ப்பு நடவடிக்கைளில் ஈடுபடுகின்றார்கள் என்பதை அறிவாரா;

(iii) அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) இன்றேல், ஏன்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 ஜூலை 08, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1189/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்குகின்ற கிரிக்கெட் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதன்படி, 25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் 25 கிரிக்கெட் சங்கங்கள் செயற்படுகின்றனவா என்பதையும்;

(iii) கிளிநொச்சி மாவட்டத்தில், கிரிக்கெட் சங்கமொன்றை அமைப்பதற்கு இதுவரையில் அனுமதி வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தினால் தமது சங்கத்தை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் பதிவு செய்வதற்கு பல தடவைகள் விண்ணப்பித்துள்ள போதிலும், இதுவரையில் அதனைப் பதிவு செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்திற்கு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மற்றும் வசதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1409/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை முதலீட்டுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முதலீட்டாளர்களை கவர்வதற்கு அரசாங்கம் வழங்குகின்ற சலுகைகள் யாவை என்பதையும்;

(iii) முதலீட்டார்களுக்கு சிரமங்களின்றி அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான ஒரு செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகின்ற வகையில் முதலீட்டுச் சபையானது மாவட்டச் செயலகங்களில் விசேட அலகுகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவை செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1494/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்றளவில் பணியில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வட மாகாணத்தில் —

(i) அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இதற்கமைவாக மிகை/ பற்றாக்குறையாகவுள்ள எண்ணிக்கை ஆகியன மாவட்ட வாரியாகவும் பணியிட வாரியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 05 வருட காலத்துக்கு அதிகமாக ஒரே பணியிடத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) நீண்ட காலமாக கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றல் கோரிக்கைகள், பதிலீடு இன்மையால் இரத்துச் செய்யப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியாயமான மற்றும் வெளிப்படையான இடமாற்றல் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1656/2025

கௌரவ சானக மாதுகொட,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2025 ஆம் ஆண்டிற்கென —

(i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iii) பன்முகப்படுத்தப்பட்ட நிதி வழங்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி நிதியை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான அளவுகோல்கள் யாவை;

(v) பன்முகப்படுத்தப்பட்ட நிதி எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(vi) எதிர்காலத்தில் மேற்படி நிதியை எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1854/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகரம் மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தான்யகம பிரதேசத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான வீட்டுத் தொகுதியொன்று உள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வீட்டுத் தொகுதி முறையாக நிருவகிக்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீட்டுத் தொகுதியில் தற்போதுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வீடுகளை வழங்கும் வழிமுறை மற்றும் அளவுகோல்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஜூலை 09, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1543/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் யட்டியாந்தோட்டையிலிருந்து சீபோத், நாகஸ்தென்ன ஊடாக நாவலப்பிட்டி வரை செல்லும் வீதி சுமார் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி வரையான மாற்று வீதியாக மேற்படி வீதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வீதியின் 9ஆவது கிலோ மீட்டரிலிருந்து அபிவிருத்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றுள்ளனவா என்பதையும்;

(vi) அதன்போது முறையான பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1642/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்காலத்தில் புதிய கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி கிரிக்கெட் மைதானங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திறமையான கிரிக்கெட் வீரர்கள் உள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்குள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1740/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் காரணமாக பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளை இழந்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் தனியார் காணிகளில் மற்றும் அரச காணிகளில் மாற்று வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி மாற்று வீடுகள் சர்வோதயபுரம், செங்காமம், ஹிஜ்ரா நகர், கனகர் கிராமம், கோமாரி 1 மற்றும் கோமாரி 2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 18 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் இதுவரையில் அந்த மக்களுக்கு உரிய காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு துரிதமாக காணி உறுதிகளை வழங்குவதற்கு எடுத்துள்ள அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1789/2025

கௌரவ பீ. ஆரியவங்ச,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டக் கிராமங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி தோட்டக் கிராமங்களில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கிராமங்கள் வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) அந்த கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1888/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள EHED சுனாமி மீள்குடியேற்றல், இஸ்லாமாபாத் மற்றும் பெரியநீலாவணை ஆகிய வீடமைப்புத் திட்டங்கள் மிக மோசமான நிலையில் இருப்பதுடன், அங்கு அடிப்படை வசதிகளும் செயலிழந்த நிலையில் காணப்படுவதால் குடியிருப்பாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர் என்பதையும்;

(ii) தொடர்ச்சியாக ஏற்படுகின்ற வெள்ளம் காரணமாக தேங்கி நிற்கும் நீர், கழிப்பறை மற்றும் கழிவு நீர் கட்டமைப்புடன் கலப்பதால் நுளம்புப் பெருக்கம் மற்றும் நோய்கள் பரவுதல் உட்பட பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதன் காரணமாக வயோதிபர்கள், பெண்கள், பிள்ளைகள் மற்றும் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் இயங்கிய கூட்டு ஆதனக் குழுக்கள் நீண்டகாலமாக செயலிழந்து காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டங்களில் நிலவும் சுகாதார, வடிகாலமைப்பு மற்றும் வெள்ளநீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டங்களை மீள்நிர்மாணிப்பதற்காக அல்லது மீளக் கட்டியெழுப்புவதற்காக நடைமுறை ரீதியான மற்றும் நிலையான தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான உத்தேச காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) தற்போது செயலிழந்த நிலையில் காணப்படும் கூட்டு ஆதனக் குழுக்களை செயற்படுத்துவதற்கு எடுக்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1906/2026

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் பல்லேமளுவ கிராம அலுவலர் பிரிவில் 43 குடும்பங்கள் வசித்துவரும் பிரதேசமானது தொல்பொருள் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக அப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையில் தடைகள் ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இணக்கம் கிடைக்காமையின் காரணமாக மேற்படி காணிகளுக்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உறுதிகள் வழங்கப்படுவது தாமதமாகியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்த விடயம் தொடர்பாக ஏதேனும் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1940/2026

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது அரசாங்கத்தின் தலையீடும் கிராமிய சமுதாயப் பங்களிப்பும் யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை முன்னெடுக்கும் சமுதாய நீர்க் குழுக்களின்/ சங்கங்களின் கட்டமைப்பும் பொறுப்பும் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் தலையீடுசெய்வதற்கான ஒரு முறைமை காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுதாய நீர்க் கருத்திட்டங்களின் ஒழுங்குறுத்துகைக்கும் கணக்காய்விற்கும் பயன்படுத்தப்படும் முறைமை யாதென்பதையும்;

(ii) இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் மூலம் அறியக் கிடைத்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வதிவிட விசாக்களில் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களின் சுகாதார நிலையை மதிப்பிடுவதற்கு, 2018/2019 ஆம் ஆண்டுகளில் புலம்பெயர்தலிற்கான சர்வதேச அமைப்பினால் சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையம் தாபிக்கப்பட்டது என்பதையும்;

(ii) ஆரம்ப தாபிப்புச் செலவுகளை மீளப்பெற்றதன் பின்னர், குறிப்பிடப்பட்ட நிலையம் சுகாதார அமைச்சினால் பொறுப்பேற்கப்படும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் அது தாபிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கோவிட்-19 பெருந்தொற்று இந்தப் பொறுப்பேற்கும் செயன்முறையை தாமதமடையச் செய்தது என்பதையும்;

(iv) 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையத்தினைப் பொறுப்பேற்பதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்ட போதிலும், அது தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சர்வதேச சுகாதார மதிப்பீட்டு நிலையம் தொடர்பான பொறுப்பேற்றலுக்காக சுகாதார அமைச்சிடம் தெளிவான திட்டம் மற்றும் காலச் சட்டகம் ஒன்று காணப்படுகிறதா என்பதையும்;

(ii) குறிப்பிடப்பட்ட நிலையத்தின் ஊடாக ஈட்டப்படும் வருடாந்த வருமானத்தை சுகாதார அமைச்சு கைவிடுவதற்கு உத்தேசித்துள்ளதா என்பதையும்;

(iii) அமைச்சினால் பெறப்பட்ட 15% வருமானப் பங்கு இதுவரையில் பயன்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

2035/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைக்கான சேவைப் பிரமாணமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சேவைப் பிரமாணத்தின்படி பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சேவைப் பிரமாணத்தின்படி ஆசிரிய ஆலோசகர்களின் பணிப்பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iv) புதிய கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துகையில் ஆசிரிய ஆலோசகர் களுக்கு விஷேட பணிப்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆசிரிய ஆலோசகர் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாகாணம் மற்றும் பாடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஆசிரிய ஆலோசகர் சேவையில் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில், குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2052/2026

கௌரவ சட்டத்தரணி அனுராத ஜயரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பிலிருந்து கண்டி மற்றும் நாவலப்பிட்டி வரை தற்போது புகையிரத போக்குவரத்து இடம்பெறுவதில்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) 'திட்வா' சூறாவளி காரணமாக அப்புகையிரத வீதியில் சேதமடைந்த இடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில், சேத மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி சேதங்கள் தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அனர்த்தத்திற்குள்ளான அனைத்து இடங்களையும் புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாது;

(vi) 06 மாத காலத்திற்குள் அப்புகையிரத வீதியைப் புனரமைத்து கண்டி வரை புகையிரத போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 ஜூலை 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

28/2024

கௌவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொதுநிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்படாததன் காரணமாக பொது மக்கள் இரவு நேரங்களில் பெருஞ்சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்பதையும்;

(ii) தேவையான இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்படாமல், தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் தெரு விளக்குகள் பொருத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தெரு விளக்குகளைப் பொருத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) தெரு விளக்குகளைப் பொருத்தும்போது பூர்த்திச் செய்யவேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் யாவையென்பதையும்;

(iii) தேவைப்பாடுகளைப் பூர்த்திச் செய்யும் இடங்களுக்கு தேவையான தெரு விளக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொது மக்களுக்கு வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

136/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப பிரதேச செயலக வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய மதுபான உரிமங்களை வழங்கும்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி உரிமங்கள் வழங்கப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

(iv) மதுபான உரிமம் வழங்கும் வழிமுறை சம்பந்தமாக கடந்த காலத்தில் பாரியளவில் சமூக எதிர்ப்பு எழுந்ததால், அந்த நிலைமையை மாற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

657/2025

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கூட்டுறவு நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியம் உள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கங்கள் யாவை;

(iii) இன்றளவில் மேற்படி நிதியத்தின் மொத்தப் பெறுமதி எவ்வளவு;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கும் மூலங்கள் யாவை;

(v) மேற்படி நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது தெஹிவளை-கல்கிசை மற்றும் மஹரகம பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கிராமிய வங்கிகள் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளன என்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி கிராமிய வங்கிகளில் வைப்பீடு செய்துள்ளவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க 'கூட்டுறவு நிதியத்தின்' கீழ் நடவடிக்கை மேற்கொள்ள இயலுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1410/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1978/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத் திறனாளிகள் வீடொன்றை நிர்மாணித்துக்கொள்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை;

(ii) காணியொன்று உள்ள போதிலும் வீடில்லாத மாற்றுத் திறனாளிகளின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'கைவிடாது ஒன்றுபட்டு' என்ற கொள்கைக்கு அமைவாக வீடொன்றை வழங்குவதற்காக கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை;

(ii) சகல மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தையும் உள்ளடக்கும் வகையில் மேற்படி அளவுகோல் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iii) அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்ட வீடுகளில் குறிப்பிடத்தக்க சதவீதத்தை மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்குவதற்கான முறைமையொன்று காணப்படுகின்றதா;

(iv) இன்றேல், அவ்வாறான வீடுகளை ஒதுக்குவதற்கான முறைமையொன்று எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1994/2026

கௌரவ ஜே.சி.அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரசாங்க சேவையில் சம்பளத் திருத்தங்களை மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓய்வூதிய முரண்பாடுகள் அதிகரிப்பதாக ஓய்வூதிய அமைப்புகள் சுட்டிக்காட்டுவதனை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகளை குறைத்துக்கொள்வதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2012/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மூலம் பாவனைக்கு நீரைப் பெறுகின்ற பதிவுச் செய்யப்பட்ட பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்மக்களுக்குத் தேவையான மொத்த நீரின் கொள்ளளவு யாதென்பதையும்;

(iii) மாவட்டத்தில் நாளாந்தம் புதிய நீர் இணைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையின் சராசரி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாவட்டத்தின் சில பிரதேசங்களில், நீரின் அழுத்தம் குறைவாகக் காணப்படுவதால் நாளாந்தம் போதியளவு நீர் கிடைக்கப் பெறாமல் அவதியுறும் மக்களும் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பிரதேசங்களுக்கு உரிய அழுத்தத்துடன் நீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) 1985 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட ருக்மல்கமவில் அமைந்துள்ள நீர்த்தாங்கி, அதிகளவான நீரைச் சேமிக்கக்கூடிய தாங்கி என்ற போதும், தற்போது அத்தாங்கி பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) ருக்மல்கம, 501 வீட்டலகுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டத்தில் வாழும் நீர் பாவனையாளர்களில் பெரும்பாலானோரும், விஜயபுர பிரதேசத்தில் வாழும் பல குடும்பங்களும் இதன் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) இந்நீர்த் தாங்கியைப் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டு வர முடியாமல் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2038/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது என்பதையும்;

(ii) தற்பொழுது மேற்படி சபைக்குச் சொந்தமாகவுள்ள மொத்தக் காணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி சபைக்குச் சொந்தமான காணிகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹந்தானை ஒதுக்கத்தில் காணப்படும் மேற்படி சபைக்குரிய மொத்தக் காணியின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கத்தில் உக்குவெல வத்த என்ற பெயரில் காணியொன்று உள்ளதா என்பதையும்;

(iii) பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றிற்காக ஹந்தானை ஒதுக்கத்தில் அமைந்துள்ள மேற்படி காணி உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணியின் தற்போதைய உரிமையாளர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2056/2026

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வர்த்தக, வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெரும்பாலான வர்த்தக நிலையங்களில், நியாயமான அடிப்படைகள் எதுவுமின்றி வியாபாரிகள் தங்களின் விருப்பத்திற்கேற்றவாறு விலைகளை நிர்ணயித்துப் பொருட்களை விற்பனை செய்கின்றனர் என்பதையும்;

(ii) அதன் விளைவாக பாவனையாளர்கள் அநீதிக்குள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா;

(ஆ) (i) இதுபோன்ற வர்த்தக நிலையங்களை சுற்றிவளைப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கடமையில் ஈடுபடுத்தியுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வகையில் நியாயமற்ற விலைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைக் கட்டுப்படுத்த அதிகாரசபையிடம் ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2086/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், சீன – இலங்கை நட்புறவு சிறுநீரகவியல் விசேட வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு மற்றும் திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலை மற்றும் அதன் சேவைப் பிரிவுகள் தாபிக்கப்படுவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) நோயாளர் சிகிச்சையளிப்பு சேவைகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு சிகிச்சையளிப்பு பிரிவுகள் மூலமாக வழங்கப்பட்டுள்ள சேவைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் தாபிக்கப்பட்டுள்ள ஆய்வுகூட வகைகள்;

(ii) வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இது வரையில் பரிசோதனை ஆய்வுகூடங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஆய்வுகூடங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?